## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, மோட்டார் வாகன (திருத்த)ச் சட்டம்

---

*[1984, ஒத்தோபர் மாதம் 11 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1984, ஒத்தோபர் மாதம் 12 ஆந் தேதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : ரூபா 1·80* *தபாற் செலவு : சதம் 90*

## 1984 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, மோட்டார் வாகன (திருத்த)ச் சட்டம்

*[1984, ஒத்தோபர் மாதம் 11 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

ச.வ.—ஓ 30/83
1578

**மோட்டார் வாகனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1984 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, மோட்டார் வாகன (திருத்த)ச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். — சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மோட்டார் வாகனச் சட்டத்தின் 27 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில், "மோட்டார் கோச்சு, மோட்டார் முச்சக்கர வான் அல்லது லொறி ஒன்று தவிர்ந்த, ஏதேனும் மோட்டார் வாகனத்துக்காக" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் மோட்டார் வாகனத்துக்காக," என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. — 203 ஆம் அத்தியாயத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 124 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— — முதன்மைச் சட்டவாக்கத்தின் 124 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்,

(i) அவ்வுட்பிரிவின் (அ), (ஆ) என்னும் பந்திகளை முறையே (ஆ), (இ) என்னும் பந்திகளாக மீள எழுத்திடுவதன்மூலமும் ; அத்துடன்

(ii) அவ்வுட்பிரிவின் மீள எழுத்திடப்பட்ட (ஆ) என்னும் பந்திக்கு நேர்முன்னதாக பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலமும் :—

"(அ) எவ்வகுப்பைச் சார்ந்த வாகனம் தொடர்பாக விண்ணப்பஞ் செய்யப்படுகின்றதோ அவ்வகுப்பைச் சார்ந்த வாகனத்தைச் செலுத்துவதற்கு விண்ணப்பகாரர் தக்க உடல்நிலையில் உள்ளார் எனப் பயன்படும், மருத்துவக் கட்டளைச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட மருத்துவத்தொழிலர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழொன்று ;" ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "மருத்துவக் கட்டளைச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 125 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 125 ஆம் பிரிவானது அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவினை நீக்கஞ்செய்வதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 129 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 129 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "தொற்றுநோய்த் தன்மைத்தான அல்லது தொடு நோய்த் தன்மைத்தான நோய் எதனுலும் பாதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் அல்லது அத்தகைய உரிமத்தினை வைத்திருப்பவர் குற்றத் தடுப்புக் கட்டளைச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளாகப் பதிவுசெய்யப்பட்ட கேடி ஒருவர் என்ற காரணத்தால்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "தொற்றுநோய்த் தன்மைத்தான அல்லது தொடு நோய்த் தன்மைத்தான நோய் எதனுலும் பாதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் VIIஅ என்னும் புதிய பாகத்தை உட்புகுத்துதல்.

6. பின்வரும் புதிய பாகம் VII ஆம் பாகத்தை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் VII அ என்னும் பாகமாகப் பயனுறுதலும் வேண்டும் :—

'பாகம் VII அ

செலுத்தற் போதனையாளர்களுக்கு உரிமமளித்தல்.

139அ. (1) ஆள் எவரும், இயைபான தேதியன்று அல்லது அதன் பின்னர் இப்பாகத்தின்கீழ் ஆணையாளரால் அதற்கென வழங்கப்பட்டதும் அப்போதைக்கு வலுவிலுள்ளதுமான (இதனகத்துப் பின்னர் "போதனையாளர் உரிமம்" எனக்குறிப்பீடு செய்யப்படும்) உரிமத்தினது அதிகாரத்தின்கீழும் நியதி, நிபந்தனைகளுக்கு இணங்கவும் தவிர, செலுத்தற் போதனையாளர் ஒருவராகச் செயலாற்றுதலாகாது.

(2) ஓராமுட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற தவறுக்குக் குற்றவாளியாகும் ஆள் எவரும் நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்க விசாரணையின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணத்துக்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

போதனையாளர் உரிமத்துக்கான விண்ணப்பம்.

139ஆ. (1) போதனையாளர் உரிமமொன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்தில் ஆணையாளருக்குச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விவரங்களைக் கொண்டிருத்தலும் அத்தகைய விண்ணப் பக் கட்டணத்தோடு சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.

(2) எவரேனும் ஆள்—

(அ) செல்லுபடியுடைய செலுத்தல் உரிமத்தை வைத்திருந்தாலொழியவும் ; அத்துடன்

(ஆ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பொருத்தமான தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டிருந்தாலொழியவும்,

போதனையாளர் உரிமம் எதுவும் அவருக்கு வழங்கப்படுதல் ஆகாது.

(3) போதனையாளர் உரிமமொன்று மோட்டார் வாகனங்களைச் செலுத்துவதற்கு போதனை அளிப்பதில் அதியுயர் தாாதரங்கள் பேணப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமென ஆணையாளர் கருதக்கூடியவாறான அத்தகைய நியதி, நிபந்தனைகளுக்கு அமைந்ததாக இருத்தல் வேண்டும்.

(4) தமது உரிமத்தின் நியதிகளுள் அல்லது நிபந்தனைகளுள் எதற்கேனும் இணங்கியொழுகத் தவறுகின்ற செலுத்தற் போதனையாளர் ஒருவர் 139உ என்னும் பிரிவின்கீழ் அவரது உரிமம் நீக்கஞ்செய்யப்படுவதற்கு அல்லது இடைநிறுத்தப்படுவதற்கு ஆளாவதுடன் மேலதிகமாக இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதலும் வேண்டும்.

போதனையாளர் உரிமத்தின் செல்லுபடிக் காலம் முதலியன.

139இ. (1) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணத்தை அல்லது கட்டணங்களை ஆணையாளருக்குச் செலுத்தியதன்மீது தவிர, போதனையாளர் உரிமம் எதுவும் இப்பாகத்தின்கீழ் அவரால் ஆள் எவருக்கும் வழங்கப்படுதல் ஆகாது.

(2) மூன்றும் (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைவாக, இப்பாகத்தின்கீழ் வழங்கப்படும் போதனையாளர் உரிமம் ஒவ்வொன்றும் இரண்டாண்டுக் காலப்பகுதிக்குச் செல்லுபடியுடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய உரிமம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணத்தைச் செலுத்தியதன்மேல் ஒரு தடவையில் இரண்டாண்டுக் காலப்பகுதிக்கு புதுப்பிக்கவும்படலாம்.

(3) இப்பாகத்தின் பின்வரும் ஏற்பாடுகளின்கீழ் நீக்கஞ்செய்யப்படும் போதனையாளர் உரிமமொன்று அது நீக்கஞ்செய்யப்படும் தேதியன்று பயனுடையதாக இல்லாதொழிதல் வேண்டும்.

(4) இப்பாகத்தின் பின்வரும் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் காலப்பகுதிக்கு இடைநிறுத்தஞ் செய்யப்பட்ட போதனையாளர் உரிமம் ஒவ்வொன்றும் அத்தகைய இடைநிறுத்தற் காலப்பகுதியின்போது பயனுடையதாதல் ஆகாது.

போதனையாளர் உரிமத்தை வழங்க அல்லது புதுப்பிக்க மறுப்பதுபற்றி விண்ணப்பகாரருக்கு அல்லது உரிமம் வைத்திருப்பவருக்கு அறிவித்தல்.

139ஈ. பிரிவு 139ஆ என்பதன் (2) ஆம் உட்பிரிவில் அல்லது (3) ஆம் உட்பிரிவில் அல்லது இவற்றின்கீழ் தரப்பட்ட தேவைப்பாடுகளுள் எதனையும் திருப்தி செய்ய போதனையாளர் உரிமத்துக்கான விண்ணப்பகாரர் அல்லது அதனை வைத்திருப்பவர் தவறியுள்ளார் என்ற காரணத்துக்காக போதனையாளர் உரிமமொன்றை வழங்க அல்லது புதுப்பிக்க ஆணையாளர் மறுக்கின்றவிடத்து, ஆணையாளர் அப்பயன்படவுள்ள எழுத்திலான கூற்றொன்றை விடயத்துக்கேற்றாற்போல விண்ணப்பகாரருக்கு அல்லது வைத்திருப்பவருக்கு சேர்ப்பித்தல் அல்லது சேர்ப்பிக்கச்செய்தல் வேண்டும். அக்கூற்று அவ்விதம் மறுப்பதற்கான காரணங்களை எடுத்துக்காட்டுதல் வேண்டும்.

போதனையாளர் உரிமத்தை நீக்கஞ்செய்தல் அல்லது இடைநிறுத்துதல்.

139உ. (1) செலுத்தற் போதனையாளர்—

(அ) இப்பாகத்தின் அல்லது அதன் கீழாக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு முரணாக போதனையாளர் உரிமத்தைத் தகாத முறையில் பெற்றுள்ளாரென,

(ஆ) அவரது நடத்தை அல்லது உடல் இயலாமை காரணமாக போதனையாளர் உரிமமொன்றைத் தொடர்ந்து வைத்திருப்பதற்கு அவர் இனிமேல் தோதானவரும் பொருத்தமானவருமான ஆள் அல்லர் என ; அல்லது

(இ) தமது உரிமத்தின் எவையேனும் நியதிகளை அல்லது நிபந்தனைகளை அல்லது இப்பாகத்தின் ஏற்பாடுகளுள் எதனையும் அல்லது அதன் கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளை மீறுகின்றார் அல்லது மீறியுள்ளாரென,

ஆணையாளர் திருப்திப்பட்டால், போதனையாளர் உரிமமொன்றை அவர் நீக்கஞ்செய்யலாம் அல்லது இடைநிறுத்தலாம்.

(2) ஆணையாளர், ஓராமுட்பிரிவினது ஏற்பாடுகளின் கீழ் உரிமமொன்றை நீக்கஞ்செய்ய அல்லது இடைநிறுத்துமுன்னர், அறிவித்தல் தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குக் குறையாததான ஒரு திகதியைக் குறித்துரைத்து அத்தேதியன்று அவ்வாறு நீக்கம்

அல்லது இடைநிறுத்தல் செய்யப்படுமெனவும் அவரது உரிமம் ஏன் அவ்வாறு நீக்கஞ்செய்யப்படலாகாது அல்லது இடைநிறுத்தப்படலாகாது என்பதற்கு ஆணையாளருக்குக் காரணம் காட்டுமாறு அப்போதனையாளரைக் கோரியும் சம்பந்தப்பட்ட செலுத்தற் போதனையாளருக்கு எழுத்திலான அறிவித்தலொன்றைக் கொடுத்தல் வேண்டும்.

(3) ஓராமுட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஆணையாளர் உரிமம் ஒன்றை நீக்கஞ்செய்துள்ளவிடத்து அல்லது இடைநிறுத்தியுள்ளவிடத்து, அத்தகைய நீக்கம் அல்லது இடைநிறுத்தம்பற்றி எழுத்திலான அறிவித்தல் மூலம் சம்பந்தப்பட்ட செலுத்தற் போதனையாளருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(4) செலுத்தற் போதனையாளர் ஒருவர் (3) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவித்தலைப் பெற்றதிலிருந்து பதினைன்கு நாட்களுக்குள்ளாக அத்தகைய நீக்கத்துக்கு அல்லது இடைநிறுத்தலுக்கு எதிராக அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன் அவரது முடிவு இறுதியானதாதலும் வேண்டும்.

(5) நீக்கற் கட்டளை அல்லது இடைநிறுத்தற் கட்டளையொன்று அக்கட்டளைபற்றி சம்பந்தப்பட்ட செலுத்தற் போதனையாளருக்கு ஆணையாளர் அறிவித்ததிலிருந்து பதினைன்கு நாட் காலப்பகுதி முடிவடையும்வரை பயனுடையதாதல் ஆகாது.

(6) சம்பந்தப்பட்ட செலுத்தற் போதனையாளர் அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அக்காலப் பகுதிக்குள்ளாக மேன்முறையீடு செய்தால் அக்கட்டளை செயலாளரால் உறுதிப்படுத்தப்படும்வரை அல்லது அத்தகைய மேன்முறையீடு எக்காரணத்துக்காகவேனும் செயலாளரால் தள்ளுபடி செய்யப்படும்வரை அக்கட்டளை பயனுடையதாதல் ஆகாது.

(7) நீக்கற் கட்டளையொன்று அல்லது இடைநிறுத்தற் கட்டளையொன்று (5) ஆம் உட்பிரிவின்கீழ் பயனுடையதாக வருமிடத்து, சம்பந்தப்பட்ட செலுத்தற் போதனையாளர் அக்கட்டளை பயனுடையதாக வந்த தேதியிலிருந்து ஆள் எவருக்கும் மோட்டார் வாகனமொன்றைச் செலுத்துவதில் போதனை அளிக்காது ஒழிதல் வேண்டும்.

(8) இப்பிரிவின்கீழ் போதனையாளர் உரிமம் நீக்கஞ்செய்யப்பட்டவரான செலுத்தற் போதனையாளர் ஒருவர் உடனடியாக அதனை ஆணையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

செலுத்தற் பயிற்சிப் பாடசாலைகளுக்கு உரிமமளித்தல்.

**139ஊ.** (1) ஆள் எவரும் இயைபான தேதியன்று அல்லது அதன்பின்னர் இப்பாகத்தின்கீழ் ஆணையாளரால் அதற்கென வழங்கப்பட்டதும் அப்போதைக்கு வலுவிலுள்ளதுமான (இதனகத்துப்பின்னர் "செலுத்தற் பயிற்சிப்பாடசாலை உரிமம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உரிமத்தினது அதிகாரத்தின்கீழும் நியதி, நிபந்தனைகளுக்கு இணங்கவும் தவிர, செலுத்தற் பயிற்சிப்பாடசாலையொன்றின் தொழிலைக் கொண்டு நடாத்துதல் ஆகாது.

(2) ஆள் எவரும் மோட்டார் வாகனமொன்றைச் செலுத்துவதில் ஆட்களுக்குப் போதனை அளிப்பதற்காக வேறு ஆட்களை அல்லது முகவர்களை ஈடுபடுத்தினால் அல்லது தொழிலுக்கமர்த்தினால் அவ்வாள் செலுத்தற் பயிற்சிப் பாடசாலையொன்றன் தொழிலைக் கொண்டு நடாத்துபவராவார்.

(3) ஓராமுட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற தவறுக்குக் குற்றவாளியாகும் ஆள் எவரும், நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்க விசாரணையின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாத குற்றப் பணத்துக்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

செலுத்தற் பயிற்சிப் பாடசாலை உரிமத்துக்கான விண்ணப்பம்.

**139எ.** (1) செலுத்தற் பயிற்சிப் பாடசாலை உரிமமொன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் ஆணையாளருக்குச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விவரங்களைக் கொண்டிருத்தலும் அத்தகைய விண்ணப்பக் கட்டணத்தோடு சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.

(2) எவரேனும் ஆள்—

(அ) செலுத்தற் பயிற்சிப் பாடசாலையில் செலுத்தற் போதனைக்கெனவும் செலுத்தற் பரீட்சைக்கெனவும் பயன்படுத்துவதற்காக விதித்துரைக்கப்பட்ட வகையினவான மோட்டார் வாகனங்களை தமது உடைமையில் அல்லது தமது பயன்பாட்டுக்கென வைத்திருந்தாலொழியவும்; அத்துடன்

(ஆ) தகுந்த அல்லது திருப்தியான முறையில் செலுத்தற் பயிற்சிப் பாடசாலையைக் கொண்டு நடாத்துவதற்கு வேண்டிய வசதி

களை வைத்திருப்பதோடு அப்பயிற்சிப் பாடசாலையில் உரிமம் பெற்ற செலுத்தற் போதனையாளர்களைத் தொழிலுக்கமர்த்தினுலொழியவும்,

செலுத்தற் பயிற்சிப் பாடசாலை உரிமமெதுவும் அவருக்கு வழங்கப்படல் ஆகாது.

(3) செலுத்தற் பயிற்சிப் பாடசாலை உரிமமொன்று செலுத்தற் பயிற்சிப் பாடசாலைகளின் தொழிற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதில் அதியுயர் தராதரங்கள் பேணப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமென ஆணையாளர் கருதக்கூடியவாருன அத்தகைய நியதி, நிபந்தனைகளுக்கு அமைந்ததாக இருத்தல் வேண்டும்.

*செலுத்தற் பயிற்சிப் பாடசாலை உரிமத்தின் செல்லுபடிக்காலம் முதலியன.*

139ஏ. (1) விதித்துரைக்கப்படக்கூடியவாருன அத்தகைய கட்டணத்தை அல்லது கட்டணங்களை ஆணையாளருக்குச் செலுத்தியதன்மீது தவிர, செலுத்தற் பயிற்சிப் பாடசாலை உரிமம் எதுவும் இப்பாகத்தின்கீழ் அவரால் ஆள் எவருக்கும் வழங்கப்படுதல் ஆகாது.

(2) மூன்றும் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, இப்பாகத்தின்கீழ் வழங்கப்படும் செலுத்தற் பயிற்சிப் பாடசாலை உரிமம் ஒவ்வொன்றும் இரண்டாண்டுக் காலப் பகுதிக்குச் செல்லுபடியுடையதாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய உரிமம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்படக் கூடியவாருன அத்தகைய கட்டணத்தைச் செலுத்தியதன்மேல் ஒரு தடவையில் இரண்டாண்டுக் காலப்பகுதிக்குப் புதுப்பிக்கவும் படலாம்.

(3) இப்பாகத்தின் பின்வரும் ஏற்பாடுகளின் கீழ் நீக்கஞ் செய்யப்படும் செலுத்தற் பயிற்சிப்பாடசாலை உரிமமொன்று அது நீக்கஞ் செய்யப்படும் தேதியன்று பயனுடையதாக இல்லாதொழிதல் வேண்டும்.

*செலுத்தற் பயிற்சிப் பாடசாலை உரிமத்தை வழங்க அல்லது புதுப்பிக்க மறுப்பது பற்றி விண்ணப்பகாருக்கு அல்லது உரிமம் வைத்திருப்பவருக்கு அறிவித்தல்.*

139ஒ. பிரிவு 139ஏ என்பதன் (2) ஆம் உட்பிரிவில் அல்லது (3) ஆம் உட்பிரிவில் அல்லது இவற்றின் கீழ் தரப்பட்ட தேவைப்பாடுகளுள் எதனையும் திருப்தி செய்ய செலுத்தற் பயிற்சிப் பாடசாலை உரிமத்துக்கான விண்ணப்பகாரர் அல்லது அதனை வைத்திருப்பவர் தவறியுள்ளார் என்ற காரணத்துக்காக செலுத்தற் பயிற்சிப் பாடசாலை உரிமமொன்றை வழங்க அல்லது புதுப்பிக்க ஆணையாளர் மறுக்கின்றவிடத்து, ஆணையாளர் அப்பயன்படவுள்ள எழுத்திலான கூற்றென்றை விடயத்துக்கேற்றற்போல விண்ணப்பகாருக்கு அல்லது வைத்திருப்பவருக்கு சேர்ப்பித்தல் அல்லது சேர்ப்பிக்கச் செய்தல் வேண்டும். அக்கூற்று அவ்விதம் மறுப்பதற்கான காரணங்களை எடுத்துக்காட்டுதல் வேண்டும்.

செலுத்தற் பயிற்சிப் பாடசாலை உரிமத்தை நீக்கஞ்செய்தல்.

139ஓ. (1) செலுத்தற் பயிற்சிப் பாடசாலைச் சொந்தக்காரர்—

(அ) செலுத்தற் பயிற்சிப் பாடசாலையை முறையற்றவகையாக அல்லது திருப்திகரமற்ற முறையில் கொண்டு நடாத்தியுள்ளாரென ;

(ஆ) எந்நியதிகளின் அல்லது நிபந்தனைகளின்மீது செலுத்தற் பயிற்சிப் பாடசாலை உரிமம் வழங்கப்பட்டதோ அந்நியதிகளுள் அல்லது நிபந்தனைகளுள் எவற்றுக்கும் இணங்கியொழுகத் தவறியுள்ளாரென ; அல்லது

(இ) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன் கீழாக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளாரென,

ஆணையாளர் திருப்திப்பட்டால், அவர் செலுத்தற் பயிற்சிப் பாடசாலை உரிமமொன்றை நீக்கஞ் செய்யலாம்.

(2) ஆணையாளர், ஓராமுட்பிரிவினது ஏற்பாடுகளின் கீழ் செலுத்தற் பயிற்சிப் பாடசாலை உரிமமொன்றை நீக்கஞ் செய்யமுன்னர், அறிவித்தல் தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குக் குறையாததான ஒரு தேதியைக் குறித்துரைத்து அத்தேதியன்று அவ்வாறு நீக்கஞ் செய்யப்படுமெனவும் அவரது உரிமம் ஏன் அவ்வாறு நீக்கஞ் செய்யப்படலாகாது என்பதற்கு ஆணையாளருக்குக் காரணம் காட்டுமாறு அச் செலுத்தற் பயிற்சிப் பாடசாலையின் சொந்தக்காரரைக் கோரியும் சம்பந்தப்பட்ட அச்சொந்தக்காரருக்கு எழுத்திலான அறிவித்தலொன்றைக் கொடுத்தல் வேண்டும்.

(3) ஓராமுட்பிரிவினது ஏற்பாடுகளின் கீழ் ஆணையாளர் உரிமமொன்றை நீக்கஞ் செய்துள்ளவிடத்து, அத்தகைய நீக்கம் பற்றி எழுத்திலான அறிவித்தல் மூலம் சம்பந்தப்பட்ட செலுத்தற் பயிற்சிப் பாடசாலையின் சொந்தக்காரருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(4) ஓராமுட்பிரிவின் கீழான ஆணையாளரின் முடிவினால் இடருற்ற எவரேனும் ஆள் (3) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்படும் அறிவித்தலைப் பெற்றதிலிருந்து பதினான்கு நாட்களுக்குள்ளாக அத்தகைய நீக்கத்துக்கெதிராக அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன் அவரது முடிவு இறுதியானதாதலும் வேண்டும் ;

(5) ஆணையாளர் சம்பந்தப்பட்ட செலுத்தற் பயிற்சிப்பாடசாலையின் சொந்தக்காரருக்கு நீக்கற் கட்டளை பற்றி அறிவித்ததிலிருந்து பதினன்கு நாட்கள் கொண்ட காலப்பகுதி முடிவடையும்வரை அக்கட்டளை பயனுடையதாதல் ஆகாது.

(6) அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக சம்பந்தப்பட்ட செலுத்தற் பயிற்சிப்பாடசாலைச் சொந்தக்காரர் அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்தால், அக்கட்டளையானது, செயலாளரினல் உறுதிப்படுத்தப்படும்வரை அல்லது அம்மேன்முறையீடு எக்காரணத்துக்காகவேனும் செயலாளரினல் தள்ளுபடி செய்யப்படும்வரை பயனுடையதாதல் ஆகாது.

(7) நீக்கற் கட்டளையொன்று (5) ஆம் உட்பிரிவின் கீழ் பயனுடையதாகவருகின்றவிடத்து, சம்பந்தப்பட்ட செலுத்தற் பயிற்சிப்பாடசாலைச் சொந்தக்காரர், அக்கட்டளை பயனுடையதாகவரும் தேதியிலிருந்து செலுத்தற் பயிற்சிப் பாடசாலைத் தொழிலைக் கொண்டுநடாத்தாதொழிதல் வேண்டும்.

(8) இப்பிரிவின்கீழ் செலுத்தற் பயிற்சிப்பாடசாலை உரிமம் நீக்கஞ் செய்யப்பட்டுள்ளவரான செலுத்தற் பயிற்சிப்பாடசாலைச் சொந்தக்காரர் அச்செலுத்தற் பயிற்சிப் பாடசாலை உரிமத்தை உடனடியாக ஆணையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

இப்பாகத்தின் கீழ் ஏதேனும் உரிமத்தை வழங்க அல்லது புதுப்பிக்க மறுப்பதற்கெதிரான மேன்முறையீடு.

139ஔ. இப்பாகத்தின்கீழ் ஏதேனும் உரிமத்தை ஆணையாளர் வழங்க அல்லது புதுப்பிக்க மறுப்பதனல் இடருற்ற எவரேனும் ஆள் அம்மறுப்புப்பற்றிய எழுத்திலான அறிவித்தலின் பதினன்கு நாட்களுக்குள்ளாக அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன் அவரது முடிவு இறுதியானதாதலும் வேண்டும்.

இப்பாகத்தின் நோக்கங்களுக்கான ஒழுங்குவிதிகள்.

139க. பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்காகவும் அல்லது எல்லாத் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எதற்காகவும் அல்லது எது தொடர்பிலும் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம் :—

(அ) இப்பாகத்தில் விதித்துரைக்கப்படவேண்டுமெனக் கூறப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்களும் ;

(ஆ) போதனையாளர் உரிமமொன்றுக்கு விண்ணப்பிப்பதற்கு அவசியமான தகைமைகளையும் அனுபவத்தையும் விதித்துரைத்தல் ;

(இ) செலுத்தற் போதனைக்கும் செலுத்தற் பரீட்சைகளுக்கும் பயன்படுத்தப்படக்கூடிய மோட்டார் வாகன வகைகளையும் அத்தகைய வாகனங்கள் அவ்வாறு பயன்படுத்தப்படுமுன்னர் இணங்கியொழுக வேண்டிய நிபந்தனைகளையும் விதித்துரைத்தல்;

(ஈ) போதனை அளிக்கும்போது செலுத்தற் போதனையாளர்களின் நடத்தையை ஒழுங்குபடுத்தல்;

(உ) செலுத்தற் பயிற்சிப் பாடசாலைகளின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தலும் செலுத்தற் பயிற்சிப்பாடசாலைகள் நடாத்தப்படவேண்டிய முறையை விதித்துரைத்தலும்; அத்துடன்

(ஊ) செலுத்தற் போதனையாளர்களாலும் செலுத்தற் பயிற்சிப்பாடசாலைகளினாலும் வைத்திருக்கப்படவேண்டிய பதிவேடுகளின் படிவத்தையும் அவற்றின்கண் பதியப்பட வேண்டிய விபரங்களையும் விதித்துரைத்தல்.

பொருள்கோடல். **139ஈ. இப்பாகத்தில்—**

"பயிற்சிப் போதனையாளர்" என்பது கட்டணத்துக்காக அல்லது வெகுமதிக்காக மோட்டார் வாகனமொன்றைச் செலுத்துவதில் போதனை அளிக்கின்ற ஆளொருவர் என்று பொருளாகும்; ஆனால் அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தில் செலுத்தற் போதனையாளராகச் செயலாற்றுகின்ற ஆளொருவரை உள்ளடக்காது;

"செலுத்தற் பயிற்சிப்பாடசாலை" என்பது கட்டணத்துக்காக அல்லது வெகுமதிக்காக மோட்டார் வாகனங்களைச் செலுத்துவதில் ஆட்களுக்குப் போதனை அளிக்கின்ற தாபனம் ஒன்று எனப் பொருளாகும்; ஆனால் அரசாங்கத் திணைக்களத்தினால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் பேணப்படும் செலுத்தற் பயிற்சிப் பாடசாலையொன்றை உள்ளடக்காது; அத்துடன்

"இயைபான தேதி" என்பது கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் இப்பாகத்தின் நோக்கங்களுக்கென இயைபான தேதியென அமைச்சரினால் நியமிக்கப்படும் தேதி என்று பொருளாகும்.

நிலைபெயர்கால ஏற்பாடுகள்.

**139ச.** இப்பாகத்தில் அடங்கியுள்ள ஏது எவ்விதமிருப்பினும், இயைபான தேதிக்கு நேர்முன்னர்—

(அ) செலுத்தற் போதனையாளராகச் செயலாற்றுகின்ற ஆளொருவர் இயைபான தேதியிலிருந்து தொடங்கும் மூன்று மாத காலப் பகுதிக்கு போதனையாளர் உரிமமொன்றின்றி அத்தகையவராகத் தொழிலைக் கொண்டு நடாத்த உரித்துடையவராதல் வேண்டும்; அல்லது

(ஆ) செலுத்தற் பயிற்சிப் பாடசாலையொன்றின் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற ஆளொருவர் இயைபான தேதியிலிருந்து தொடங்கும் மூன்றுமாத காலப்பகுதிக்கு செலுத்தற் பயிற்சிப் பாடசாலை உரிமமொன்றின்றி அத்தகைய தொழிலைக் கொண்டுநடாத்த உரித்துடையவராதல் வேண்டும்.

அத்துடன், அக்காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய ஆள், விடயத்துக்கேற்றூற்போல, போதனையாளர் உரிமமொன்றுக்கு அல்லது செலுத்தற் பயிற்சிப் பாடசாலை உரிமமொன்றுக்கு விண்ணப்பித்தால், அவ்வுரிமம் வழங்கப்படும்வரை அல்லது இறுதியாக மறுக்கப்படும்வரை அல்லது விண்ணப்பம் மீளப்பெறப் படும்வரை மேற்சொல்லப்பட்டவாறு அத்தகையவராகத் தொழிலைக் கொண்டு நடாத்த உரித்துடையவராதலும் வேண்டும்.'.

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 148 ஆம் பிரிவானது அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவினைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— **முதன்மைச் சட்டவாக்கத்தின் 148 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

" (14) ஏதேனும் இடத்திலிருந்து பெருவழியொன்றுக்குள் வரும் மோட்டார் வாகனம் ஒன்று, அத்தகைய பெருவழிக்குள் நுழையு முன்னர், நிறுத்துகோடுகள் வர்ணந் தீட்டப்பட்ட இடத்தில் நிற்றல் வேண்டும்.".

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 151 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— **முதன்மைச் சட்டவாக்கத்தின் 151 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

(அ) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில், " அல்லது வாடகைக் காரை அல்லது கட்டணத்திற்காகவோ அல்லது வெகுமதிக்காகவோ ஆட்களைக் கொண்டு செல்வதற்கெனக் கருதப்பட்ட வேறு ஏதேனும் வாகனத்தை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, " அல்லது கட்டணத்திற்காகவோ அல்லது வெகுமதிக்காகவோ ஆட்களைக் கொண்டுசெல்வதற்கெனக் கருதப்பட்ட வேறு ஏதேனும் மோட்டார் வாகனத்தை " என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் (1இ) என்னும் உட்பிரிவில்—

(i) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "அற்ககோல் சுவாசச் சோதனையொன்றுக்கு உள்ளாகும்படி தேவைப்படுத்தலாம் என்பதுடன், அந்த ஆள் அத்தகைய தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்." என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "அற்ககோல் சுவாசச் சோதனையொன்றுக்கு அல்லது அத்தகைய ஆள் அற்ககோல் அருந்தியுள்ளாரா எனக் கண்டறிவதற்காக அரசாங்க மருத்துவ அலுவலரினால் பரிசோதிக்கப்படுவதற்கு உள்ளாகும்படி தேவைப்படுத்தப்படலாம் என்பதுடன், அந்த ஆள், விடயத்துக்கேற்றுப்போல அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்." என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ii) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :—

"(ஆ) அத்தகைய ஆள் அற்ககோல் உட்கொண்டுள்ளார் என அற்ககோல் சுவாசச் சோதனை அல்லது அரசாங்க மருத்துவ அலுவலரின் பரிசோதனை வெளிக்காட்டுமிடத்து அல்லது அத்தகைய ஆள் அத்தகைய சோதனைக்கு அல்லது பரிசோதனைக்குத் தம்மை உள்ளாக்குவதற்கு மறுக்குமிடத்து முரணைச் சான்று அளிக்கப்பட்டிருந்தாலொழிய, அத்தகைய ஆள் அற்ககோல் உட்கொண்டுள்ளார் என ஊகிக்கப்படுதல் வேண்டும்." ;

(iii) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :—

"(ஈ) ஒரு பெருவழியின்மீது செல்லும் மோட்டார் வாகனம் ஒன்றின் செலுத்துநர் அற்ககோலை அல்லது போதையூட்டும் ஏதேனும் அவுடதத்தை உட்கொண்டுள்ளார் என்ற பயன்பட அமைந்த அரசாங்க மருத்துவ அலுவலர் ஒருவரின் அறிக்கை, முரணைச் சான்று அளிக்கப்பட்டிருந்தால் ஒழிய, அத்தகைய ஆள் அற்ககோலை அல்லது போதையூட்டும் ஏதேனும் அவுடதத்தை உட்கொண்டுள்ளார் என்னும் நிகழ்வுக்குப் போதிய சான்றாகவிருத்தல் வேண்டும்." ; அத்துடன்

(iv) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில், "போதையூட்டும் அவுடதங்களை உட்கொண்டபின்னர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அற்ககோலை அல்லது போதையூட்டும் அவுடதங்களை உட்கொண்டபின்னர்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ;

(இ) அப்பிரிவின் (1இ) என்னும் உட்பிரிவினை நேரே உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவினை இடுவதன் மூலமும் :—

"(1இஇ) இப்பிரிவின்கீழ் எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிந்துள்ளாரென நியாயமான காரணங்கள் பொலிசு அலுவலர் ஒருவருக்கு இருக்கின்றவிடத்து, ஆணைப்பத்திரமின்றி அத்தகைய ஆளை அவர் கைதுசெய்யலாம்." ; அத்துடன்

(ஈ) அப்பிரிவின் (1ஈ) என்னும் உட்பிரிவில், அதன் (iii) ஆம் பந்தியில் "போதையூட்டும் ஏதேனும் அவுடதத்தை உட்கொண்டுள்ளாரா" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "அற்ககோலை அல்லது போதையூட்டும் ஏதேனும் அவுடதத்தை உட்கொண்டுள்ளாரா" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 158 ஆம் பிரிவானது அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 158 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(3) மோட்டார் சைக்கிள் ஒன்றைச் செலுத்துபவர் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதான ஒருவகையினதான பாதுகாக்கும் ஒரு தலைக்கவசத்தை அணியாத வேறு எவரேனும் ஆளை தமது மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் செல்லுகின்றவிடத்து, அத்தகைய செலுத்துநர், அத்தகைய ஆள் ஆகிய இருவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.".

10. பின்வரும் புதிய பிரிவானது 160 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றது; அத்துடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 160அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தில் 160அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

"வீதி பழுது பார்ப்பு வேலைகள் நடைபெறும் போதிலெல்லாம் எச்சரிக்கைக் குறிகள் வெளிக்காட்டி வைக்கப்பட வேண்டும்.

160அ. வீதியொன்றுக்கு பழுதுபார்ப்பு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதிலெல்லாம், எச்சரிக்கைக் குறிகளையும் இரவில் விளக்குகளையும் வீதியைப் பயன்படுத்துவோரின் பாதுகாப்புக்காக வெளிக்காட்டி வைக்கப்படச் செய்வித்தல், அத்தகைய பழுதுபார்ப்பு வேலைகளைச் செய்யும் அல்லது செய்விக்கும் ஆளின் கடமையாதல் வேண்டும்.".

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவானது, "காரை நிறுத்துதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குக் பதிலாக, "அத்தகைய மோட்டார் வாகனத்தை நிறுத்துதல் வேண்டும்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவைத் திருத்துதல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 164 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 164 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(அ) வாகனுறிகளின் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் நோக்கங்களுக்காக உதவிக் கண்காணிப்பாளர் பதவிவரிசைக்குக் குறையாத பொலிசு அலுவலர் ஒருவரினதும் கட்டளைமூலம்; அல்லது"

முதன்மைச் சட்டவாக்கத்தின் 167 ஆம் பிரிவைத் திருத்துதல்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 167 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "காரை கவனிப்பின்றி விட வேண்டிய" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "மோட்டார் வாகனத்தை கவனிப்பின்றி விட வேண்டிய" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(4) பொலிசு அலுவலர் ஒருவரது அபிப்பிராயப்படி பெருவழியொன்றில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள அல்லது விட்டு வைக்கப்பட்டுள்ள மோட்டார் வாகனம் ஒன்றினால் அல்லது ஏதேனும் பொருளினால், பண்டத்தினால் அல்லது வஸ்துவினால் ஏதேனும் பெருவழியில் அல்லது பகிரங்க நடைபாதையில் வாகனாதிகளுக்கு ஏதேனும் தடைவிளைவிக்கப்படுகின்றதாக இருக்குமிடத்து, அத்தகைய தடையை விளைவிக்கும் மோட்டார் வாகனத்தை அல்லது அத்தகைய வேறு பொருளை, பண்டத்தை அல்லது வஸ்துவை அத்தகைய பொலிசு அலுவலர் அகற்றுவிக்கலாம் என்பதுடன் அவ்வாறு அகற்றியதற்கான செலவை சொந்தக்காரரிடமிருந்து அறவிடலாம்.

(5) நாலாம் உட்பிரிவின்கீழ் மோட்டார் வாகனத்தை, பொருளை, பண்டத்தை அல்லது வஸ்துவை அகற்றும்போது நன்னோக்கத்துடன் விளைவிக்கப்பட்ட எச்சேதத்துக்கும் பொலிசு அலுவலர் எவரும் சேதஈடு செலுத்துவதற்கு ஆளாக மாட்டார்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 188 ஆம் பிரிவைத் திருத்துதல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 188 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவினை அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவென மீள இலக்கமிடுவதன்மூலமும்; அத்துடன்

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவினை உடனடுத்து பின்வரும் புதிய உட்பிரிவினைச் சேர்ப்பதன்மூலமும்: —

"(2) பொலிசு அலுவலர் ஒருவரின் அபிப்பிராயப்படி, பெருவழியொன்றில் ஏதேனும் லொறி அல்லது மோட்டார் முச்சக்கர வான், அந்த லொறிக்கான அல்லது மோட்டார் முச்சக்கர வானுக்கான அரசிறை உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட ஆகக் கூடிய பாரத்துக்கும் கூடுதலான பாரத்தை ஏற்றிச் செல்லுகின்றவிடத்து அல்லது அத்தகைய பொலிசு அலுவலரின் அபிப்பிராயப்படி பெருவழியைப் பயன்படுத்தும் எவருக்கேனும் ஆபத்தை விளைவிக்கக்கூடிய அத்தகைய முறையில் அதன்மீது

ஏற்றப்பட்டுள்ள பண்டங்களை ஏற்றிச் செல்லுகின்றவிடத்து, அத்தகைய பொலிசு அலுவலர் அந்த லொறியை அல்லது மோட்டார் முச்சக்கர வானை தடுத்துவைக்கலாம் ; அத்துடன்—

(அ) அந்த லொறி அல்லது மோட்டார் முச்சக்கர வான், அந்த லொறிக்கான அல்லது மோட்டார் முச்சக்கர வானுக்கான அரசிறை உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட ஆகக் கூடிய பாரத்துக்கும் கூடுதலான பாரத்தை ஏற்றிச் செல்லுகின்றதென அவர் அபிப்பிராயப்படும் எவ்விடயத்திலும் எவையேனும் அத்தகைய மேலதிக பண்டங்களை அல்லது அதன் பாகத்தை அகற்றலாம் அல்லது அகற்றுவிக்கலாம் என்பதுடன் அப்பண்டங்கள் லொறியின் அல்லது மோட்டார் முச்சக்கர வானின் சொந்தக்காரரிடம் அல்லது பண்டங்களின் சொந்தக்காரரிடம் அவை சேர்ப்பிக்கப்படும் வரை அத்தகைய பண்டங்களின் பாதுகாப்பான கட்டுக்காப்பை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான அத்தகைய நடவடிக்கைகள் எல்லாவற்றையும் எடுக்கலாம் ; அல்லது

(ஆ) பெருவழியைப் பயன்படுத்தும் எவருக்கேனும் ஆபத்தை விளைவிக்கக்கூடிய அத்தகைய முறையில் அதன் மீது ஏற்றப்பட்ட பண்டங்களை லொறி அல்லது மோட்டார் முச்சக்கரவான் ஏற்றிச்செல்லுகின்ற எவ்விடயத்திலும் பெருவழியைப் பயன்படுத்துவோருக்கு அபாயமற்ற அத்தகைய முறையில் இருக்கத்தக்கதாக பண்டங்களை மீள ஏற்றுவிக்கலாம்.".

15. பின்வரும் புதிய பிரிவானது 189 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றது ; அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 189அ என்னும் பிரிவாகப் பயனுறுதல் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தில் 189அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

'இழுவை வண்டியின் வேறு பிரித்துக் காட்டும் இலக்கம்.

189அ. ஏதேனும் மோட்டார் வாகனம் அத்துடன் இழுவை வண்டி இணைக்கப்பட்டு ஏதேனும் பெருவழியில் பயன்படுத்தப்படுகின்றவிடத்து, இழுவை வண்டியானது, இழுவை வண்டியின் வேறு பிரித்துக்காட்டும் இலக்கத்துடன் மேலதிகமாக அது இணைக்கப்பட்டுள்ள மோட்டார் வாகனத்தின் வேறு பிரித்துக்காட்டும் இலக்கத்தையும் வெளிக்காட்டுதல் வேண்டும்.'.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 193 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 193 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(அ) அவ்வாகனம் அல்லது அதிற் பொருத்தப்பட்டுள்ள ஏதேனும் தயர் பொருத்தமான நிலைமையில் இல்லையென நம்புவதற்கு நியாயமான காரணங்கள் அவருக்கிருந்தால், பெருவழியொன்றில் மோட்டார் வாகனமொன்றை நிறுத்தலாம் ; அத்துடன்—

(i) செலுத்துநருக்கு நியாயமானளவு வசதியான ஏதேனும் பொருத்தமானதும் கட்டளையிற் குறித்துரைக்கப்படுவது

மான இடத்தில் பரிசோதனைக்கென அவ்வாகனத்தைக் கொணருமாறு அவ்வாகனத்தின் செலுத்துநருக்கு எழுத்திலான கட்டளைமூலம் பணிக்கலாம் ; அல்லது

(ii) அத்தகைய பரிசோதனையின் நோக்கத்துக்காக அவ்வாகனத்தைத் தடுத்துவைக்கலாம் ; அத்துடன் ".

**முதன்மைச் சட்டவாக்கத்தில் 215ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.**

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 215அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 215ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

" முதன்மைச் சட்டவாக்கத்தின் 137 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினை மீறுவதற்கான தண்டம்.

215ஆ. எவரேனும் ஆளின் செலுத்தல் உரிமத்தை இடைநிறுத்துகின்ற அல்லது நீக்கஞ்செய்கின்ற அல்லது உரிமமொன்றைப் பெறுவதற்கு தகுதியற்றவரென அவரை வெளிப்படுத்துகின்ற கட்டளையொன்று வலுவில் இருக்கும்போது பெருவழியொன்றில் மோட்டார் வாகனமொன்றைச் செலுத்துவதன்மூலம் இச்சட்டத்தின் 137 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அத்தகைய ஆள், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஆறுமாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு இரண்டிலொரு விவரணத்தினதான மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும். ".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 217 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 217 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், " ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத " என்பது தொடங்கி " ஆளாதல் வேண்டும் " என்பது வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

" எழுநூற்றைம்பது ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணத்துக்கு அத்துடன் இரண்டாவது தடவையாகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணத்துக்கும் அவரது செலுத்தல் உரிமம் இடைநிறுத்தப்படுவதற்கும், அத்துடன் மூன்றுவது தடவையாக அல்லது அடுத்துப்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணத்துக்கும் செலுத்தல் உரிமம் இல்லாதொழிக்கப்படுவதற்கும் அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்கான கடூழிய மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும். ".

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்," ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத " என்னுஞ் சொற்களுக்குப்பதிலாக " ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணத்துக்கு, அத்துடன் இரண்டாவது தடவையாகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணத்துக்கு, அத்துடன், மூன்

ரூவது தடவையாக அல்லது அடுத்துப்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கும் ஆறுமாத காலப்பகுதிக்கு அவரது செலுத்தல் உரிமம் இடைநிறுத்தப்படுவதற்கும்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்.

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 218 ஆம் பிரிவானது, "ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாத" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 218 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 219 ஆம் பிரிவானது, "ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஆயிரம் ரூபாவுக்குக் குறையாத" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 219 ஆம் பிரிவைத் திருத்துதல்

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 220 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 220 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஆயிரம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணத்துக்கு, அத்துடன் இரண்டாவது தடவையாக அல்லது அடுத்துப்பின்னர் எப்போதேனும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணத்துக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆயிரம் ரூபாவுக்குக் குறையாத" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(இ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஆயிரம் ரூபாவுக்குக் குறையாத" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 221 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 221 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) "III ஆம் பாகத்தின்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "IV ஆம் பாகத்தின்" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) "இருநூற்றைம்பது ரூபாவுக்கு மேற்படாத" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "இருநூற்றைம்பது ரூபாவுக்குக் குறையாத" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்.

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 223 ஆம் பிரிவானது, "ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆயிரம் ரூபாவுக்குக் குறையாத" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 223 ஆம் பிரிவைத் திருத்துதல்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 224 ஆம் பிரிவைத் திருத்துதல்.

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 224 ஆம் பிரிவானது "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல்" என்பது தொடங்கி அப்பிரிவு முடியவுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

"குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இருநூற்றைம்பது ரூபாவுக்குக் குறையாத குற்றப் பணத்துக்கு அத்துடன் இரண்டாவது தடவையாகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணத்துக்கு, அத்துடன் மூன்றாவது தடவையாக அல்லது அடுத்துப்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் எழுநூற்றைம்பது ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணத்துக்கும் அவரது செலுத்தல் உரிமம் இல்லாதொழிக்கப்படுவதற்கும் ஆளாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 224 ஆ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்தல்.

25. பின்வரும் புதிய பிரிவானது 224 அ என்னும் பிரிவை நேரே உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றது ; அத்துடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 224 ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதல் வேண்டும் :—

"சட்டச்செயற்பாடுமூலம் செலுத்துதல் உரிமங்களை இடைநிறுத்தல்.

224 ஆ. மோட்டார் வாகனமொன்றன் செலுத்துநர் ஒருவர்—

(அ) (i) மடத்துணிவுடனும் கவலையீனமாகவும் செலுத்தியமைக்காக ; அல்லது

(ii) அபரிமித வேகத்தில் செலுத்தியமைக்காக ; அல்லது

(iii) உயிர் இழப்பை அல்லது பாரதூரமான ஊறுபாட்டை விளைவித்த விபத்தை ஏற்படுத்தியமைக்காக,

அவருக்கெதிராகக் குற்றவழக்குத் தொடரப்பட்டிருக்குமிடத்து ; அல்லது

(ஆ) உயிர் இழப்பை விளைவித்த விபத்தொன்றில் சம்பந்தப்பட்டிருந்து, அவ்விடயம் விசாரணைக்கென நீதிவான் ஒருவருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளவிடத்து,

நீதிவான், அத்தகைய வாகனத்தைச் செலுத்தியவரின் உரிமம் இடைநிறுத்தஞ்செய்யப்பட வேண்டுமென பொலிசாரால் விண்ணப்பமொன்று செய்யப்பட்டதன் மேல், வழக்கு அல்லது விசாரணை முடிவுறுத்தப்படும் வரை உரிமம் அவ்வாறு இடைநிறுத்தஞ் செய்யப்பட வேண்டுமென தமது தற்றுணிபில் கட்டளை இடலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 240 ஆம் பிரிவைத் திருத்துதல்.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 240 ஆம் பிரிவானது, 'நகர இடப்பரப்பு' என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

'"நகர இடப்பரப்பு" என்பது—

(அ) ஏதேனும் மாநகரசபையின் அல்லது நகரசபையின் எல்லைகளுக்குள் அடங்கிய ஏதேனும் இடப்பரப்பு ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக நகர இடப்பரப்பொன்றென ஒழுங்குவிதிமூலம் வெளிப்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் இடப்பரப்பு,

எனப் பொருளாகும்.'.

27. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணை இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணையை மாற்றீடு செய்தல்.

"இரண்டாம் அட்டவணை

| I<br>சட்டத்தின் பிரிவுகள் | II<br>ஏற்பாடுகள் | III<br>குற்றப்பணைத் தொகை<br>ரூ. ச. |
|---|---|---|
| 21 | வேறுபிரித்து அடையாளம் காட்டும் தகடுகள் | 100.00 |
| 22 | வேறு பிரித்து அடையாளம் காட்டும் தகட்டின் உருவம் | 100.00 |
| 38 | அரசிறை உரிமம் மோட்டார் வாகனத்தில் கொண்டு செல்லப்படுதலும் தேவைப்படும்போது காண்பித்தலும் | 100.00 |
| 45 | அரசிறை உரிமத்தை மீறி மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்துவதன் மீதுள்ள மட்டுப்பாடு | 50.00 |
| 123 (1) (அ) | செலுத்தல் உரிமமின்றி, செலுத்துவதன் மீதானதடை | 150.00 |
| 123 (1) (ஆ) | செலுத்தல் உரிமமில்லாத ஆளைத் தொழிலுக்கமர்த்துதல் | 150.00 |
| 123 (2) | 18 வயதுக்குட்பட்ட சாரதி | 150.00 |
| 140 | வேகமாகச் செலுத்துதல் | 200.00 |
| 148 | வீதி விதிகள் | 100.00 |
| 152 | மோட்டார் வாகனங்களைச் செலுத்தும்போது சாரதி இருக்கவேண்டிய நிலை | 100.00 |
| 153 | செலுத்தும்போது சாரதிகளால் கொடுபட வேண்டிய சைகைகள் முதலியன | 100.00 |
| 154 | மோட்டார் வாகனங்களை பின்னோக்கிச் செலுத்தல் | 20.00 |
| 155 | ஒலி அல்லது ஒளி எச்சரிக்கைகள் | 100.00 |
| 156 | மோட்டார் வாகன மிதிபலகை முதலியவற்றில் ஆட்களை ஏற்றிச் செல்லல் அல்லது ஏற்றிச்செல்ல அனுமதித்தல் | 100.00 |
| 157 | மோட்டார் கார்களின் முன்புற ஆசனங்களில் இருப்போர் தொகை | 100.00 |
| 158 (2) | பாதுகாப்புத் தலைக்கவசம் அணியத்தவறுதல் | 100.00 |
| 159 | விளம்பரங்கள் விநியோகித்தல் | 100.00 |
| 162 | பொலிசு அலுவலர்களின் வாகனப் பணிப்புகளும் சைகைகளும் | 150.00 |
| 165 | எரிபொருள் தாங்கிக்குள் எடுக்கப்படும்போது கவனிக்கப்பட வேண்டிய முற்காப்புகள் | 20.00 |
| 166 | பெருவழியில் மோட்டார் வாகனங்களை நிறுத்துதல் அல்லது தரித்துவைத்தல் | 150.00 |
| 167 | பெருவழியில் மோட்டார் வாகனம் கவனிப்பில்லாது நிறுத்தப்படும்போது அல்லது விட்டுவைக்கப்படும்போது அல்லது பழுதடைந்துள்ளபோது எடுக்கப்படவேண்டிய முற்காப்புகள் | 150.00 |
| 178 | அளவுக்கு அதிகமாக ஆட்களை ஏற்றிச்செல்லல் | 150.00 |
| 189 | லொறியில் ஏற்றிச் செல்லப்படக்கூடிய ஆட்கள் | 150.00.". |

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.